திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தேனியிலுள்ள மருத்துவ மனையானது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு சென்றிருந்தபொழுது அறிந்திருப்பார்கள். இப்பொழுது அங்கே ஒரு டாக்டர்தான் இருக்கிருர். அங்கு இன்னும் டாக்டரைப் போடுவதற்கும், அந்த மருத்துவமனையை விஸ்தாரப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே பொறுப்புள்ள தலைவர்கள் கேட்கின்றபொழுது, எல்லா மருத்துவ மனைகளும் விஸ்தாரப்படுத்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மருத்துவமனையைப் பற்றியும் கேட்கும்பொழுது நாட்டுமக்களுக்கே சந்தேகம் உண்டாகிவிடும், மருத்துவமனை இருக்கிறதா என்று. ஏனென்ருல் 10 இலட்ச ரூபாயில் இப்பொழுதுதான் தேனியில் கட்டி முடிக்கப்பட்டு 3 தினங்களுக்குமுன் திறந்து வைக்கப்பட்டது. அங்கே ஒரு பெண் டாக்டர் தேவை என்பதை இந்தத் துறை ஏற்று, நிதி இலாக்காவிற்கு சம்மதம் கேட்டு எழுதியிருக்கிறது. நிதி இலாக்கா அதை ஒத்துக்கொண்டால், அங்கே ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள காசநோய்ப் பிரிவு

* 455 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் செயல்பட்டு வரும் மாவட்ட காச நோய் தடுப்பு நிலயத்தினை நாகையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 456 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள காச நோய் பகுதியில் இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 30 படுக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண் 457, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரிசன நல அமைச்சர் அவர்கள் இப்பொழுது வரவில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, if this question has been included in the order paper, I would like to know whether the Hon. Minister has requested its postponement. If it is not so, it will be embarrassing to us. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக மாண்புமிகு அமைச்சர்கள் வினாக்கள் கூட ஆர்டர் பேப்பரிலே வழக்கமாக இருப்பது போல் தான் இருக்கும். ஆனால் அந்த மரபுகூட இப்பொழுது கொஞ்சம் மாறி வருகிறது. சில அமைச்சர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் தள்ளி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடலாம். அப்பொழுது அவைக்கும் கௌரவமாக இருக்கும். வினாக்கள் போய்ப்போய்த் திருப்பித் திருப்பி வருவதை மாண்புமிகு அமைச்சரவர்களும் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Price of Sugar

* 461 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that retail price of sugar in Madras City and districts has gone up since November 1971; and

(*b*) if so, the steps taken to bring down the price?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1971, டிசம்பர் திங்களில் இந்த அரசு, சர்க்கரை ஆலைகளுடன் பேச்சு வார்த்தை நடத்திற்று. அப்போது, கிலோகிராம் ஒன்று ரூ. 2 வீதம் சர்க்கரை பொதுமக்களுக்கு பங்கீடு செய்யப்படுவதற்காக, திங்கள் ஒன்றுக்கு தாம் வெளியனுப்பும் சர்க்கரை உற்பத்தியினால் 10% அளவை அரசுக்குத் தருவதாக அந்தச் சர்க்கரை ஆலைகள் ஒப்புக்கொண்டன. 1972 ஜனவரி முதற்கொண்டு, சர்க்கரை கிலோ ஒன்று ரூ. 2 என்ற வீதத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படுவதற்காக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 என்ற தொழிற்சாலை விலை வீதத்தில் சர்க்கரை ஆலைகள் தமக்கு வழங்குகிற 60 சதவீத சர்க்கரை அளவிலிருந்து இந்திய அரசு ஒதுக்கீடுகள் செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் அனுமதி பெற்ற கடைகள் மூலமாக பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைகள் காண்பிக்கப்படுவதன் மேல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.